... Judge-cum-Chief Judicial Magistrate
RECEIVED
22 DEC 1997
Thanjavur at Kumbakonam

303

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973 - 'பி', 'சி' 'டி' ('B', 'C', 'D' Groups ) வகுப்பினைச் சார்ந்த அரசு அலுவலர்கள் வெளிநாடு பயணம் செய்வதற்கு முன் 'கடவுச் சீட்டு' பெறுவதற்கு "மறுப்பின்மைச் சான்று" வழங்குதல் - துறைத் தலைவர்களுக்கு அதிகார ஒப்படைப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எ)துறை

அரசாணை நிலை எண்.288 நாள்: 4.12.1997

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973, விதி 24(A)-ன் கீழ் "அரசுப் பணியாளர் வெளிநாடு செல்லும் நிமித்தம் 'கடவுச் சீட்டு' பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு அல்லது வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்ள அரசிடமிருந்து 'மறுப்பின்மைச் சான்று' பெறுதல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது, பயணத்திற்கான குறிக்கோள், தங்க உத்தேசித்துள்ள காலம், பயணம் செய்யவிருக்கும் நாடுகளின் பெயர்கள் ஆகிய விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதியின் கீழ் 'மறுப்பின்மைச் சான்று' வழங்கும் அதிகாரம் அரசிற்கே உள்ளது.

308/97

2. இது குறித்து துறைத் தலைவர்களுக்கு அதிகார ஒப்படைப்பு செய்வது பற்றி அரசு ஆய்வு செய்து 'பி', 'சி', 'டி' ('B', 'C', 'D' Groups) பிரிவினைச் சார்ந்த அரசு அலுவலர்களுக்கு வெளிநாடு செல்லும் நிமித்தம் (சுற்றுலா பயணியாகவோ அல்லது புனித யாத்திரை நிமித்தமோ அல்லது உறவினர் மற்றும் நண்பரைக் காண அல்லது வேலை தேடும் பொருட்டு) 'கடவுச் சீட்டு' பெற அல்லது புதுப்பிக்க மறுப்பின்மைச் சான்று வழங்குவதற்கு துறைத் தலைவர்களுக்கே அதிகாரம் வழங்கலாம் என்று முடிவு செய்துள்ளது.

3. எனவே, இது குறித்து அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது. 'பி', 'சி', 'டி' ('B', 'C', 'D' Groups ) பிரிவினைச் சார்ந்த அரசு அலுவலர்களுக்கு வெளிநாடு செல்லும் நிமித்தம் (சுற்றுலாப் பயணியாகவோ அல்லது புனித யாத்திரை நிமித்தமோ அல்லது உறவினர் மற்றும் நண்பரைக் காணும் அல்லது வேலை தேடும் பொருட்டோ) 'கடவுச் சீட்டு' பெற அல்லது புதுப்பிக்க 'மறுப்பின்மைச் சான்று' அந்தந்தத் துறை தலைவர்களே வழங்கலாம். இருப்பினும், 'எ' பிரிவைச் சார்ந்த ('A' Group) அலுவலர்களுக்கு 'கடவுச் சீட்டு' பெறும் நிமித்தம் 'மறுப்பின்மைச் சான்று' வழங்கும் அதிகாரம் அரசிடமே உள்ளது.

4. மேற்கூறியவாறு, அரசு அலுவலர்களுக்கு 'கடவுச் சீட்டு' பெறும்பொருட்டு 'மறுப்பின்மைச் சான்று' வழங்கும்போது துறைத் தலைவர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை உறுதி செய்து கொள்ள வேண்டும்:

(1) அரசு அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா அல்லது நடவடிக்கை மேற்கொள்ளும் சிந்தனை உள்ளதா?

(2) ஊழல் குற்றச்சாட்டு குறித்து விசாரணைகள் நிலுவையில் மற்றும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும் எண்ணம் உள்ளதா?

(3) அரசின் பாதுகாப்பு ஆவணங்களில் (Security Record) எதிர்மறையாக ('Adverse remarks ) குறிப்பிடப்பட்டுள்ளாரா?

(4) "மறுப்பின்மைச்சான்று" வழங்குவது குறித்த முடிவினை துறைத் தலைவரே எடுக்க வேண்டும். அவரே 'மறுப்பின்மைச் சான்றில்", கையொப்பம் இட வேண்டும்.

5. மேலும், துறைத் தலைவர்கள் 'மறுப்பின்மைச் சான்று' வழங்கும்போது கீழ்க்கண்ட நிபந்தனைகளை உள்ளடக்கி ஆணை வெளியிட வேண்டும்.

(i) இந்த அரசின் முன் அனுமதியின்றி அவர் வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், எந்த ஒரு நியமனத்தையோ அல்லது பயிற்சியையோ அல்லது கல்வியையோ மேற்கொள்ளக் கூடாது.

(ii) அவர் பயணத்திற்கு ஆகும் பயணச் செலவு மற்றும் இதர செலவுகளுக்கு அரசு பொறுப்பேற்காது.

(iii) அவர் இம்மாநிலத்தில் வகித்துவரும் பதவியை இராஜினாமா செய்யக் கூடாது. அவருடைய பதவி விலகல் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படாது.

(iv) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அவர் எந்த ஒரு வேலை வாய்ப்பினையும் பெற பேச்சு வார்த்தை நடத்த அல்லது முயலக் கூடாது.

(v) வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முன் அவர் தகுதியுள்ள விடுப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டுவதுடன், அவர் விடுப்பில் இருக்கும் கால முழுமைக்கும் முன் அனுமதி பெற வேண்டும்.

(vi) இந்த மறுப்பின்மைச் சான்றிதழின் பேரில் அவர் பெறும் கடவுச் சீட்டை உரிய அதிகாரியின் முன் அனுமதியின்றி அடுத்து வரும் பயணங்களுக்கு அவர் பயன்படுத்தக் கூடாது.

(vii) இந்த 'மறுப்பின்மைச் சான்று' ஆணை வெளியிடப்பட்ட நாள் முதல் ஆறு மாதங்களுக்குத்தான் செல்லுபடியாகும்.

6. மேலும், துறைத் தலைவர்கள் 'கடவுச் சீட்டு' பெற 'மறுப்பின்மைச் சான்று' கோரும் அரசு அலுவலர்களிடம் அரசு நிலை ஆணை எண். 40, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (அ.வி. III) துறை, நாள் 22.1.9[illegible]-ல் குறிப்பிட்டுள்ளவாறு வெளிநாடுகளுக்கு பிரயாணம் மேற்கொள்ளும் அரசு அலுவலர்களிடம் (சுற்றுலாப் பயணியாக, புனித யாத்திரை நிமித்தம், நண்பர்களை மற்றும் உறவினர்களை பார்க்கும் பொருட்டு) 'பிணைமுறி ஒப்பந்தமும்' பெறத் தேவையில்லையோ, அதுபோல் மேற்கண்ட நிகழ்வுகளிலும் 'பிணைமுறி ஒப்பந்தம்' தேவை இல்லை.

7. மேலே பத்தி 3-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்கிணங்க விதி 24(எ) அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973-க்கான விதி திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

அனைத்துத் தலைமைச் செயலகச் செயலாளர்கள், சென்னை-9
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்து துறைத் தலைவர்கள் (மாவட்ட ஆட்சியர்/மாவட்ட நீதிபதிகள்/
தலைமை குற்றவியல் மாஜிஸ்ட்ரேட் உட்பட அனைத்து பொதுத்துறை
நிறுவனங்கள்/வாரியங்கள்)
முதன்மை ஆணையர் & வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5
பதிவாளர், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், சென்னை-6
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104
செயலர், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2

<u>நகல்:</u> அனைத்து அதிகாரிகள்/பிரிவுகள், பணியாளர் & நிர்வாகச் சீர்திருத்தத்துறை சென்னை-9
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9
முதலமைச்சரின் செயலர், சென்னை-9
நிதி (ப்பி.பி.இ) துறை, சென்னை-9

/பணிந்தனுப்பப்படுகிறது/